IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.110/2024

dated : 19.02.2026

D.W.1

Name சிம்சன் பிரதாப்சிங்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது வழக்கறிஞராக உள்ளேன். நான் காவல் துறையில் பணிபுரிந்தபோது திருநெல்வேலி, தென்காசி மாவட்டத்தில் பணிபுரிந்ததில்லை. சங்கரன்கோவில், கடையநல்லூர் பகுதிகள் எனக்கு அறிமுகமான பகுதி என்றால் சரிதான். என் மனைவி தொழிலதிபாராக இருந்து வருகிறார். அவருக்கு கல்குவாரி, புளூமெட்டல் பாக்டரி, இரப்பர் எஸ்டேட் ஆகியவை உள்ளது. 1, 2 பிரதிவாதிகள் எனக்கு அவர்களது உறவினர்கள் மூலம் தெரியும் பழக்கமானாவர்கள் அல்ல. 1வது தபசில் சொத்து சம்பந்தமாக வில்லங்க சான்று பார்த்தேன். அவ்வாறு வில்லங்க சான்று பெற்று அதன்பின்னரே கிரையம் பெற்றதாக என் எதிர் வழக்குரையில் கூறவில்லை. நான் பார்த்ததாக கூறப்படும் வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு 1ம் பிரதிவாதிக்கு மேற்படி சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது குறித்த வேறு ஆவணங்கள் எதையும் தாக்கல்

செய்யவில்லை. நான் வில்லங்க சான்று தவிர வேறு எதையும் பார்த்ததாக ஞாபகமில்லை. வழக்குரை 1வது தபசில் சொத்து 1ம் பிரதிவாதி எந்த வகையில் பாத்தியப்பட்டது என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. 1ம் தபசில் சொத்தை கிரையம் பெறும்போது 1ம் பிரதிவாதியின் உறவினரை நான் விசாரித்தேன். குறிப்பிட்டு யாரை விசாரித்தேன் என்று ஞாபகமில்லை. என் மனைவி நல்ல மனநிலையுடனும், உடல்நிலையிடனும் உள்ளார் என்றால் சரிதான். வழக்குரை சொத்தை என் மனைவி நேரில் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வேறு யாரும் இந்த வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியும் மோசடியாக வாதியின் உரிமையை மோசடி செய்யும் நோக்கத்துடன் வா.சா.ஆ.21யை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.21 உரிய மறுபயனுக்கு எழுதப்பட்ட ஆவணம் அல்ல என்றும் அது இல்லா நிலை என்றும் அது வாதியின் உரிமையை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. வங்கி கணக்கின் மூலம் பணம் செலுத்தப்பட்டுள்ளது. 3ம்பிரதிவாதி நல்லெண்ணக் கிரையதாரர் அல்ல என்றால் சரியல்ல.3ம் பிரதிவாதிக்கு நான் சாட்சியமளிக்க தகுதியற்றவர் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கதக்கது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.19 17:58:18 +0530